# 21.06.2022ம் திகதிய 51வது மாதாந்த சபைக்கூட்டம்

| | | |
|---|---|---|
| நேரம் | : | மு.ப 9.30 மணி |
| காலம் | : | 21.06.2022ம் திகதி செவ்வாய்க்கிழமை |
| இடம் | : | சபா மண்டபம் தலைமை அலுவலகம் |
| தலைமை | : | கௌரவ தவிசாளர் திரு.ப.மயூரன் |

**கூட்டத்தில் பங்குபற்றியோர்**

| | | |
|---|---|---|
| ➢திரு.பத்மநாதன் மயூரன் | - | கௌரவ தவிசாளர் |
| ➢திரு.இராஜமனோகரன் ஜெயகரன் | - | கௌரவ உபதவிசாளர் |
| ➢திருமதி.கௌசலா சிவா | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.கணேசு முருகையா | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.இராசையா இராசலிங்கம் | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.செல்வநாயகம் சிவலோஷன் | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.தெய்வேந்திரம் கிரிதரன் | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.கபிரியேல்பிள்ளை திருஞானராஜா | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திருமதி.ரவிதாஸ்.கோமதி | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திருமதி.சச்சிதானந்ததேவி செல்லத்துரை | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.வல்லிபுரம் ஸ்ரீகணேசா | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.கந்தையா குகானந்தன் | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.சுப்பிரமணியம் விஜயகுமாரன் | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திருமதி.வாசுகி சுதாகர் | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.குமாரசாமி மதுசுதன் | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.தாமோதரம்பிள்ளை தியாகமூர்த்தி | - | கௌரவ உறுப்பினர் |
| ➢செல்வி.குலேந்திரன் பிரிந்தா | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திருமதி.அழகேந்திரம் அகிலாண்டரூபி | - | கௌரவ உறுப்பினர் |
| ➢செல்வி.விஜயகுமார் சிந்துஜா | - | கௌரவ உறுப்பினர் |
| ➢திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன் | - | செயலாளர் |

**கூட்டத்திற்கு சமூகமளிக்காதோர்**

| | | |
|---|---|---|
| ➢திரு.வஸ்ரியாம்பிள்ளை சிறில்றூமன் விஜேந்திரன் | - | கௌரவ உறுப்பினர் |

மேற்படி கூட்டமானது மு.ப 9.30 மணியளவில் கௌரவ தவிசாளர் திரு.ப.மயூரன் அவர்கள் தலைமையில் ஒரு நிமிட மௌன அகவணக்கத்துடன் கூட்டம் ஆரம்பமானது. அடுத்து சபைக்கீதம் இசைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களினால் அனைவருக்கும் வணக்கத்தினையும் தெரிவித்துக்கொண்டு நிகழ்ச்சி நிரலில் முதலாவது விடயம் சபைக்கூட்ட அறிக்கை அங்கீகரித்தல். 50வது மாதாந்த கூட்ட அறிக்கை (மே) சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 21.06.2022/01**

20.05.2022ம் திகதிய 50வது மாதாந்த சபைக்கூட்ட அறிக்கை அங்கீகரிக்கப்படுகின்றது என கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் அடுத்து தவிசாளர் அறிவிப்புகள். குறித்த அறிவிப்பில் கௌரவ தவிசாளர் அவர்கள் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் வீட்டுத்தோட்டத்தை ஊக்குவிக்கும் நோக்கில் தனிநபர் ஒருவரின் உதவியுடன் வட்டார ரீதியாக வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்களை கொண்டு மரக்கறி விதைகள் 23.06.2022ஆம் திகதி சாந்தி விவசாயப் பொருட்கள் விற்பனை நிலையத்தில் வட்டார ரீதியில் 10 நபருக்கு வழங்கப்படவுள்ளது. அதற்கான பசளை உரமும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை சபைக்கு அறியத்தருவதாகத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம், செல்வி.கு.பிரிந்தா ஆகியோர் மு.ப. 9.55 மணியளவில் சபைக்கூட்டத்திற்கு வருகை தந்தனர்

கௌரவ தவிசாளர் அவர்கள் தமது அறிவிப்பில் மேலும் கூறுகையில் குறித்த மரக்கறி விதைகளை வழங்கிய தனிநபரால் சிறந்த முறையில் வீட்டுத்தோட்டத்தை மேற்கொள்ளும் முதல் 10 பயணாளிகளுக்கு பரிசு வழங்குவதாகத் தெரிவித்துள்ளார். அதற்கமைய எமது சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் தெரிவுசெய்யவுள்ளதாக சபைக்குத் தெரிவித்தார்.

மேலும் கௌரவ தவிசாளர் அவர்களினால் சபைக்கு தமது தனிப்பட்ட கருத்தாக யாழ்.மாநகரசபையில் கடந்த அமர்வில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை போல நாமும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்ட நிதி பற்றாக்குறையால் சபை கலைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நாம் எமக்கான சம்பளப் படியின்றி மக்களுக்கு சேவையாற்றவுள்ளோம் என்பதனை தெரியப்படுத்துவதற்கான தீர்மானம் நிறைவேற்றுதல் தொடர்பாக கௌரவ உறுப்பினர்களின் அபிப்பிராயத்தினைக் கோரினார்.

அதன்போது குறித்த விடயம் சபையில் விரிவாக ஆராயப்பட்டது. அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்களினால் இத்தீர்மானமானது வரவேற்கத்தக்கதொன்று. இந்த முடிவினை ஏற்று மக்களுக்கான சேவையில் தொடர்ந்து பயணிப்போம் என்றார்.

கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்களினால் சபை கலைக்கப்படும் சந்தர்ப்பத்தில் இச்சேவையினை தொடர்ந்து செய்ய சம்மதிப்பதாகத் தெரிவித்தார்.

கௌரவ உபதவிசாள் அவர்கள் கருத்துரைக்கையில் நாட்டில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் ஏற்று எமது சபை சார்பாக எமது மாதாந்த படியினை விட்டுக்கொடுத்து மக்களுக்கும் நாட்டிற்கும் எமது சேவையினை வழங்குவோம் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்களினால் மக்கள் சேவைக்காகவே புறப்பட்டுள்ள நாம் அவர்களுக்கான சேவையினை இனியும் செய்து முடிப்போம். இதில் கருத்து வேறுபாடின்றி ஏற்றுக்கொள்வோம் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.தா.தியாகமூர்த்தி அவர்கள் கருத்துரைக்கையில் எமக்கு வழங்கும் படியினை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டியதில்லை. அப்படியினை சேர்த்து எமது பகுதியிலுள்ள வறிய மக்களுக்கு சேவை செய்யலாம். இதனை அரசாங்கத்திற்கு விட்டுக்கொடுக்க வேண்டிய தேவையில்லை. நல்லூர் பகுதி மக்கள் தங்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, தங்களுக்கு பணி புரிவதற்காக எம்மை தெரிவு செய்து இச்சபைக்கு அனுப்பியுள்ளனர். எம்பகுதி மக்கள் அரசியல் ரீதியில் ஏனையோரால் கொள்ளை அடிக்கப்பட்ட காரணமாக வறுமையினை எதிர்நோக்குகின்றனர். தற்போதைய நிலையிலும் அதிக வறுமை இனிவரவுள்ளது. அதன்போது எமது பகுதி மக்களுக்கு இப்படியினை சேர்த்து சேவை செய்ய தாம் விரும்புவதாகவும் . இவ்வாறான செயற்பாட்டை சபையால் மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் தம்மால் மேலதிகமாக நிதியினை வழங்க முடியும் எனவும் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் கருத்துரைக்கையில் கௌரவ உறுப்பினர் திரு.தா.தியாகமூர்த்தி அவர்கள் கூறியது போல எம்பகுதி மக்களுக்கு வழங்குவது சிறந்தது. எமது படியினை எமது வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்களுக்கே வழங்கலாம் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்களினால் மக்களுக்கு சேவை செய்யவே வந்த நாம் குறித்த படியினை எதிர்பார்த்து வரவில்லை. எமது பகுதி மக்கள் எமது சேவையினால் பலனடைந்துள்ளனர். இதனை வளர்க்க வேண்டுமெனில் நாம் தொடர்ந்து செயற்பட வேண்டும். ஆகவே இத்திட்டத்தை நாம் ஏற்று ஏனைய சபைகளுக்கு முன்னுதாரணமாக செயற்பட நல்ல வழிமுறை எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திருமதி.சு.வாசுகி அவர்கள் கருத்துரைக்கையில் கௌரவ தவிசாளர் அவர்களினால் குறிப்பிடப்பட்டதை போல சபையினை அரசாங்கம் கலைக்கும் போது குறித்த நிதி எமக்குரியதாக இருக்குமா?. அரசாங்கமானது பொருளாதாரப் பிரச்சனை காரணமாக சபையினை கலைக்கும் போது சபை நிதி அரசுடமையாகின்றது. நாம் பொதுவாக சேவை செய்யவே வந்துள்ளோம். சபையின் காலத்தை ஒரு வருடம் நீடிக்கப்பட்டது. அதனை 7ஆம் மாதத்துடன் கலைத்தால் சபையுடன் இணைந்து செயற்பட முடியாது எனத் தெரிவித்த போது கௌரவ தவிசாளர் அவர்களினால் இப்பிரேரணை என்னவெனில் நிதி நெருக்கடி காரணமாக நிதி வழங்க இயலாது சபையினை கலைக்கும் சந்தர்ப்பம் ஏற்படுமாயின் குறித்த நிதியின்றி சபையினைக் கொண்டு செல்வதற்கு சபை உறுப்பினர்கள் தீர்மானமே தற்போது கோரப்படுகின்றது எனத் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திருமதி.சு.வாசுகி அவர்கள் அவ்வாறு சபை கலைக்கப்பட்ட பின்னர் எமது நிதியை ஒருங்கிணைத்து செயற்படுத்தலாமா என்பது தமது கேள்வி என்றும் அவ்வாறு சபை செயற்படுமாயின் அதை அந்தந்த வட்டாரத்திற்காக செலவழிப்பதற்கு நாம் இணங்கிக்கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ தவிசாளர் அவர்கள் பதிலளிக்கையில் கௌரவ உறுப்பினர் திரு.தா.தியாகமூர்த்தி ஐயா அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஒவ்வொருவருக்கும் வரும் படி அவர்களது சுய விருப்பம். அதனை அவர்கள் தமது விருப்பு வெறுப்பிற்கேற்ப செயற்படுத்தலாம். அதனை கையகப்படுத்தி சபையூடாக மேற்கொள்வது சாத்தியமற்றது. அவர்கள் தனிப்பட்ட முறையில் வாழ்வாதார உதவிகயோ அல்லது வேறுவகை உதவிகளை வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்களுக்கு வழங்கலாம். குறித்த நிதியை பெற்று சபையூடாக வழங்குவது சட்டவரையறைக்குட்படுத்த முடியாது எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் கருத்துரைக்கையில் தவிசாளர் அறிவித்த அறிவிப்பானது தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிதி நெருக்கடியில் மக்கள் பாதிக்கப்பட்டது போல அரசிற்கு நிதி நெருக்கடி இருப்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். நிதி நெருக்கடியால் சபைக்கு நிதி வழங்க முடியாதவிடத்து சபைகளை கலைக்கும் சந்தர்ப்பம் ஏற்படுமிடத்து நல்லூர் பிரதேசசபை மக்களுக்கானவர்கள். மக்களுக்கு முன்மாதிரியாக சேவையாற்றி வருகின்றோம். எனவே நிதி நெருக்கடியால் சபைகளுக்கு நிதியை வழங்க முடியாத விடத்து சபைகளை கலைக்கும் சந்தர்ப்பம் ஏற்படின் எமது படியினை விடுத்து மக்களுக்கு பணியாற்ற தயாராக உள்ளதாகத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் மு.ப.10.10 மணியளவில் சபைக்கூட்டத்திற்கு சமூகமளித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் கருத்துரைக்கையில் நிதி நெருக்கடி காரணமாக சபை கலைக்கும் சந்தா்ப்பத்தில் மக்களுக்கு சேவையாற் வந்துளள் நாம் படியின்றி முன்னுதாரணமாக சேவையாற்ற தாம் பூரண ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் கருத்துரைக்கையில் கௌரவ தவிசாளரின் நோக்கம் நன்று. இது நடைமுறைச்சாத்தியமாக வருமா? எனத் தெரிவித்ததுடன் சபையின் நிதி தொடர்பாக தனியே தவிசாளர் உபதவிசாளர் உறுப்பினர்களது படி கொடுப்பனவு மட்டும் அடங்காது அனைத்து சபைகளின் கூட்டத்திற்கான செலவுகள், காகிதாதி, போக்குவரத்துச் செலவு, தவிசாளர் வாகனச் செலவு என அனைத்து வகைச் செலவுகளையும் அவர்கள் கணக்கு பார்ப்பார்களே தவிர தனியே படியாக வழங்கப்படும் நிதியை பார்ப்பதில்லை. அத்துடன் நாம் ஏற்கனவே சேவை செய்துவிட்டே இங்கு உறுப்பினர்களாக வந்துள்ளோம். இவர்களது படிக்காக சேவையாற்றவில்லை. அரசின் கஜனாவே காலியாகியுள்ளது. நல்லூர் பிரதேசபையின் நிதி மூலங்கள் நிறைவாகவே உள்ளது. அதற்கு அரசின் நிதி தேவையில்லை. நிறைவாக நிலையான வைப்புகளும் வருமானமும் உள்ளது என்பதனை காட்டி சபை கலைக்க வேண்டாம் என அவர்களை கோரலாம். ஆனால் தவிசாளரின் நோக்கம் நன்று. அதனை பாராட்டி வரவேற்பதாகத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் சபையின் படியினை எதிர்பார்த்து மக்களுக்கு சேவை செய்யவில்லை என்றும் நாம் படியின்றியே சேவையாற்றுவோம் எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திருமதி.சு.வாசுகி அவர்களினால் சபை கலைக்கப்பட்டால் எனும் வார்த்தைப்பிரயோகம் உள்ளடக்கப்பட்டு இம்முன்மொழிவு தவறான விடயம். ஆகவே இத்தீர்மானம் பிழை என்பதால் எதிர்ப்பதாகத் தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் நிதி நெருக்கடி காரணமாக சபை கலைக்கும் சந்தர்ப்பம் அமையுமாக இருந்தால் படியின்றி சேவை செய்வதே எமது நோக்கமாக அமையும் என்பதனையே தாம் இதில் முன்மொழிந்துள்ளதாக தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் செல்வி.கு.பிரிந்தா அவர்கள் கருத்துரைக்கையில் இத்தீர்மானம் நடைமுறைக்கு சாத்தியமில்லை என்பதால் நிராகரிப்பதாக தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் கருத்துரைக்கையில் சமூகசேவை செய்தமையாலேயே இங்கு உறுப்பினர்களாக வந்துள்ளேன். தொடர்ந்தும் ஊதியமின்றி சேவையாற்றுவோம் என வடமாகாணம் முழுவதிலுமுள்ள சபைகள் தெரிவித்தால் தொடர்ந்தும் நாம் சேவை செய்ய சாதகமாக அமையலாம்.

அதனையே கௌரவ தவிசாளர் இன்று இப்பிரேரணையாக கொண்டு வந்துள்ளதாகவும் அதனை பிழையானது என்று கூறமுடியாது எனவும் தெரிவித்து குறித்த தீர்மானத்திற்கு ஆதரவளிப்பதுடன் தாம் எக்காலத்திலும் ஊதியமன்றி சேவையாற்றுவேன். தாம் ஊதியத்தை எதிர்பார்ப்பதில்லை எனத் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து குறித்த விடயம் தொடர்பாக வாதப்பிரதி வாதங்கள் ஏற்பட்டு சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கௌரவ உறுப்பினர் திரு.தா.தியாகமூர்த்தி அவர்கள் மு.ப.10.40 மணியளவில் சபைக்கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

**தீர்மானம் 21.06.2022/02**

ஒருவருட காலம் நீடிக்கப்பட்ட சபையானது நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி காரணமாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கும் நிதியினை காரணம் காட்டி சபையினை கலைக்கும் சந்தர்ப்பம் ஏற்படுமாயின் நல்லூர் பிரதேசசபையானது உருப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற படியின்றி மக்களுக்கு சேவையாற்றவுள்ளதாக கோரிக்கையினை அரசாங்கத்திற்கு முன்வைப்பதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய கௌரவ உறுப்பினர்களான திருமதி.சு.வாசுகி, செல்வி.கு.பிரிந்தா, திரு.தா.தியாகமூர்த்தி, திரு.க.முருகையா ஆகியோர் தவிர்ந்த ஏனையோரால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதனைத்தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்கள் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் ஒவ்வொரு குடியிருப்பாளர்களும் தமது வளர்ப்பு நாய்களை கட்டி வளர்ப்பதற்கு நாம் சபையூடாகவும் விழிப்புணர்வினை மேற்கொள்வோம் நீங்கள் ஒவ்வொரு வட்டார உறுப்பினர்களும் உங்கள் வட்டாரங்களில் வழிப்புணர்வாக மேற்கொள்ளுமாறு உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சி நிரலில் அடுத்து கால அவகாசத்துடனான பிரேரணைகள். அவற்றில் கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்களது பிரேரணையினை சபையில் எடுத்துக் கொள்வதற்கு சபையிடம் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 21.06.2022/03**

கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்களது கனடா பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட பிரேரணைத் தீர்மானத்தினை வாழ்த்தி வரவேற்று எம் சபையூடாகவும் அதனை உறுதிப்படுத்தல் எனும் பிரேரணையினை சபையில் எடுத்துக் கொள்வதற்குசபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

அதனைத்தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் தமது பிரேரணை தொடர்பாக கருத்துரைக்கையில் வரலாற்றுச் சிறப்புமிகக் விடயத்தை அதாவது கடந்த மே 18 முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற இனப்படுகொலையினை நினைவுகூரப்பட்டது. உலகம் முழுவதிலுமுள்ள தமிழர்கள் குறித்த நினைவேந்தலை அனுஸ்டித்தார்கள். ஆனால் வரலாற்றில் என்றுமில்லாதவாறு வல்லரசு நாடான கமேடிய பாராளுமன்றத்தில் எமக்கு நடந்தவை இனப்படுகொலை என்பதனை ஏற்றுக்கொண்டு அங்கீகரத்து அதனை இனப்படுகெலை நாளாக பிரேரணையினை நிறைவேற்றியுள்ளனர். நாம் இதற்காக கனேடிய பாராளுமன்ற பிரதம அமைச்சருக்கும் அத்துடன் இப்பிரேரணையினை வெற்றிபெறச் செய்த லிபரல் கட்சயை சேர்ந்த கரிஆனந்தசங்கரி அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை சபை சார்பாக தெரிவிப்பதாகத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் ஈழத்தில் நடைபெற்ற இனப்படுகொலை பற்றி கனேடிய பாராளுமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றுகின்றார்கள் எனில் எத்தனையோ ஆவணங்களை சான்றுகளை பகுப்பாய்வு செய்திருப்பார்கள். அதனை ஏற்று ஒரு தீர்மானத்தை எடுத்து அவர்களும் வருடாவருடம் நினைவு கூறுவுள்ளதால் எமக்கான நீதிக்கான வெற்றி ஆரம்பமாகின்றது. ஆகவே இதற்காக பாடுபட்ட மற்றும் குரல் கொடுத்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவிக்க விரும்புவதாகவும் எமக்கு நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலை என ஏற்றுக்கொள்ளப்பட்டு ஜினோசடைட் எடியூகேசன் வீக்கையும் அங்கு ஏற்படுத்தியுள்ளனர். இதற்காக பாடுபட்ட கனேடிய பாராளுமன்னறத்தை சேர்ந்த பிரதமர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அத்துடன் குறித்த விடயம் தொடர்பாக பங்காற்றிய அனைவருக்கும் நன்றிகளை தெரிவிப்பதாக கனேடிய தூதரகம் மூலமாக கடிதம் அனுப்ப வேண்டும். என்பதுடன் எமது நல்லூர் பிரதேசசபை ஊடாகவும் இங்கு நிகழ்ந்தது இனப்படுகொலை இனப்படுகொலை தமிழர்களாக ஏகோபித்த

ஏகமனதான ஆதரவுடன் இதற்கு ஆதரவழிக்க வேண்டும் என கட்சி பேத இல்லாது அனைத்து உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்வதாகவும் இது நல்லூர் பிரதேசசபையால் எழுப்பப்படும் குரலாக அமைய வேண்டும் எனவும் தற்போது ஈழத்தமிழர்களுக்கு நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலை தான் என்பதனை சர்வதேசமும் ஏற்றுக்கொள்வதற்கான ஒரு படிக்கல்லாக குறித்த கனேடிய பாராளுமன்றத்தில் இப்பிரேரனை எடுக்கப்பட்டுள்ளதையிட்டு அதனை வாழ்த்தி அதனை வரலாற்று சாதனையாக பதிவு செயய் வேண்டும் எனவும் இதனைப் போல ஏனைய உள்ளூராட்சி சபைகளும் இவ்வாறு தீர்மானத்தை நிறைவேற்றி அது வெளியுலகிற்கும் மேற்குலகிற்கும் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் தீர்மானம் அங்கு செல்லும் போது இது ஒரு பொது வாக்கெடுப்பின் மூலமாக வந்த தீர்மானமாகத் தான் கருதப்படும். ஆகவே நல்லர் பிரதேசசபையும் இதற்கு ஒத்துழைப்பு தருமாறு அனைவரிடமும் கோரிக்கை விடுப்பதுடன் கனேடிய பாராளுமன்றத்திற்கும் எமது நன்றிநவிதலை எமது சபை சார்பாக எமது letterhead இல் சபையில் தெரிவிக்கப்பட்ட இவ்விடயத்தை சுருக்கமாக தெரிவித்து எடுக்கப்பட்ட தீர்மானத்தையும் தெரிவித்து அதன் மூலமாக கனேடிய பாராளுமன்றத்திற்கு நன்றி தெரிவித்திருக்கின்றோம். இங்கு ஏற்பட்ட இனப்படுகொலைக்கான நீதியை நீங்கள் பெற்றுத்தருவீர்கள் என்பதனை நாம் நம்புவதாகவும் கனேடிய தூதரகத்தின் மூலமாக கனேடிய பாராளுமன்னறத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பதனை எனக்கேட்டுக்கொண்டார்.

கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் மு.ப.10.50 மணியளவில் சபைக்கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீணேசா அவர்கள் மு.ப.10.50 மணியளவில் சபைக்கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

அதனைத்தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்கள் கருத்துரைக்கையில் எமது நாட்டில் ஏற்பட்டது இனப்படுகொலை என்பதனை ஏற்று கனடா பாராளுமன்றத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை ஏற்று அதனை பாராட்டுவதுடன் இது வரவேற்கத்தக்க விடயம். அதை மேற்குலக நாடுகளில் சென்ற மாதம் தாம் சென்றிருந்த போது 19 சபைகளில் அத்தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர். வடக்கில் யாழ் மாநகரசகையிலும் அத்தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர். இன்று முன்னுதாரணமாக கௌரவ உறுப்பினரின் பிரேரணையுள்ளது. எனவே எமது மண்ணில் நடைபெற்றது இனப்படுகொலையே என்பதனை நாம் ஏகமனதாக தீர்மானிப்போம். அத்துடன் கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் தெரிவித்தது போல கனடா பாராளுமன்றத்திற்கு வாழ்த்துச் செய்தியை சபையூடாக அனுப்புவோம் எனவும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து குறித்த பிரேரணை தொடர்பாக கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் கருத்துரைக்கையில் கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதனின் பிரேரணையானது வடக்கில் நடைபெற்றது இனப்படுகொலையே என்பது அனைத்து நாடுகளுக்கும் தெரிந்த விடயம். அதற்கான நீதி இன்றும் பெறப்படாத நிலையில் கனேடிய பாராளுமன்றத்தில் இதற்கான பிரேரணை ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்துடன் ஐரோப்பாவில் வாழும் இளையோரிடையே வடக்கிலுள்ள தமிழர்களை பற்றிய சிந்தனை வரவேற்கத்தக்கது. காலம் கடந்தேனும் இனப்படுகொலை புரிந்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் எனவும் ஐக்கிய நாட்டில் கூட்டங்கள் நடைபெறுகின்ற இன்றைய சூழலில் இவ்வாறான தீர்மானம் எடுப்பது சாலச் சிறந்தது எனவும் தமது பரிபூரண சம்மதத்தினையும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த கௌரவ உறுப்பினர் திருமதி.சு.வாசுகி அவர்கள் குறித்த பிரேரணை தொடர்பாக கருத்துரைக்கையில் கனடா பாராளுமன்றில் வடக்கில் நடைபெற்றுள்ளது இனப்படுகொலையே என்பதை அவர்கள் ஏகமனதாக தீர்மானித்திருப்பது மிகப்பெரிய விடயம் எனவும் தெரிவித்து குறித்த காலப்பகுதியில் நடைபெற்றமை தொடர்பாக கருத்துக்களை தெரிவித்து அதற்கு நீதி ஏன் கிடைக்கப்பெறவில்லை என்பதனையும் தெரிவித்து 46.1 தீர்மானத்தினையும் குறிப்பிட்டு இங்கு இனப்படுகொலை நடைபெற்றிருக்கின்றது. அது உலகலாவிய ரீதியில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதற்கு கனேடிய பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானம் எமக்கு சான்று. இன்று கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் அவர்களுக்கு வாழ்த்து தெரிவிப்பது மட்டுமல்ல தமிழ் இனத்திற்கான இனப்படுகொலை நிகழ்ந்துள்ளது என்பதனை அளுத்தம் திருத்தமாக கூறும் சந்தர்ப்பத்தில் இனப்படுகொலை நடைபெற்றுள்ளது உண்மை. அது இற்றை வரை மனித உரிமைப் பேரவையில் கிடப்பில் உள்ளது. குறித்த தீர்மானத்தை மாற்றி 13 வருடங்களாக நீதியைக் கேட்டு கிடப்பில் உள்ள மனிதப்பேரவலத்தின் விடயத்தை சர்வதேச குற்றவியல் பொறுப்பிற்கு நாம் பாரப்படுத்துவதற்கான துரித நடவடிக்கையினை எடுப்பதற்கு எமது நல்லூர் பிரதேசசபையும் சேர்ந்து அளுத்தம் கொடுக்கின்றது. எமது கௌரவ உறுப்பினர் மிகத் தேவையாக விடயத்தை சபைக்கு கொண்டு வந்துள்ளார். இப்பிரேரணையினை வெற்றிகரமாக ஒன்றிணைத்து

ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றிய கனடா பாராளுமன்றத்திற்கும் அதற்காக பாடுபட்ட அனைவருக்கும் நல்லூர் பிரதேசசபை சார்பாக நன்றிகளையும் வாழ்த்தையும் கூறுவதுடன் இப்பிரதேசசபையில் இப்பிரேரணையினை கொண்ட வந்த கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்து இந்த இத்தீர்மானத்தை அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அதனைத் தொடந்து கௌரவ தவிசாளர் அவர்கள் கூறுகையில் வடக்கு கிழக்கில் இடம்பெற்றது இனப்படுகொலைகளே என்பதனை அனைவரும் எழுந்து நின்று ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றுவோம் எனத் தெரிவித்ததை தொடர்ந்து சபையினர் அனைவரும் எழுந்து நின்று ஏகமனதாக கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றினர்.

**தீர்மானம் 21.06.2022/04**
கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்களின் பிரேரணைக்கமைவாக எமது வடக்கு கிழக்கில் நடந்தவை இனப்படுகொலைகளே என்பதனை நல்லூர் பிரதேசசபையும் ஏற்றுக்கொள்கின்றது என்பதுடன் குறித்த தீர்மானத்தை கனேடிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளமைக்கு நல்லூர் பிரதேசசபையால் நன்றிகளை கனேடிய பாராளுமன்றத்திற்கு தெரிவித்து கனேடிய தூதரகத்திற்கு கடிதம் அனுப்புவதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

**அதனைத் தொடர்ந்து மு.ப.11.10 மணி தொடக்கம் 11.30 மணிவரை தேனீர் இடைவேளைக்காக சபையானது கௌரவ தவிசாளர் அவர்களினால் ஒத்தி வைக்கப்பட்டது.**

தேனீர் இடைவேளையினைத் தொடர்ந்து சபையானது 11.30 மணிக்கு ஆரம்பமானது. அதன்போது கௌரவ உறுப்பினர்களான திருமதி.அ.அகிலாண்டரூபி, திருமதி.சு.வாசுகி, செல்வி.குபிரிந்தா ஆகியோர் சமூகமளிக்கவில்லை.

கால அவகாசத்துடனான பிரேரணையில் அடுத்து கௌரவ உறுப்பினர் திரு.தெ..கிரிதரன் அவர்களது பிரேரணையினை சபையில் எடுத்துக் கொள்வதற்கு கௌரவ தவிசாளர் அவர்களினால் சபையிடம் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 21.06.2022/05**
கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்களது சிறுவர் கடத்தப்படும் சம்பவம் மற்றும் துஸ்பிரயோகங்களுக்கெதிராக விழிப்புணர்வுச் செயற்பாடு எனும் பிரேரணையினை சபையில் எடுத்துக் கொள்வதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.க.குகானந்தன் அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

அதனைத்தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்களது சிறுவர் கடத்தப்படும் சம்பவம் மற்றும் துஸ்பிரயோகங்களுக்கெதிராக விழிப்புணர்வுச் செயற்பாடு தொடர்பாக கருத்துரைக்கையில் குறித்த சம்பவங்கள் தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது எனத் தெரிவித்த இதற்கு மன்னர் நடைபெற்ற வித்தியாவில் படுகொலை தொடக்கம் தற்போது வவுனியாவை சேர்ந்த யதுசி வரையான படுகொலைகளை சுட்டிக்காட்டியதுடன் அண்மையில் புதிய செம்மணி வீதியிலும் ஒரு சிறுமி கடத்தப்பட்டு அதிஸ்ட வசமாக துஸ்பிரயோகமின்றி மீள மீட்கப்பட்டுள்ளார். இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதவகையில் தனியார் மற்றும் ஏனைய இடங்களுக்கு தனியாக செல்வதை தவிர்க்குமாறு பெற்றோருக்கு விழிப்புணர்வு செய்ய வேண்டும் எனவும் எமது பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏனைய பொது அமைப்புகளுக்கு விழிப்புணர்வுகளை செய்ய வேண்டும் எனவும் அந்தவகையில் நல்லூர் பிரதேசெயலகம் ஊடாக அது தொடர்பான உத்தியோகத்தரை அணுகி தொடர்பெடுக்க வேண்டும் எனவும் தாம் பிரதேசசெயலரூடாக நேரடியாக தொடர்பு கொண்டு கலந்துரையாடி இது தொடர்பான நிலை ஏற்படுமிடத்து 1929 எனும் hot line இலக்கத்தின் மூலமாகவும் 0212224022 எனும் இலக்கத்தின் மூலம் கோப்பாய் பொலிஸ் நிலையத்திடமும் 0212214063 எனும் இலக்கத்தின் மூலம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் இவற்றை தடுக்கும் நோக்கில் நல்லூர் பிரதேசசபையூடாக தனியார் கல்வி நிறுவனங்கள். பாடசாலைகள் மற்றும் பொது அமைப்புகளுக்கு முதற்கட்டமாக விழிப்புணர்வினை செய்ய வேண்டுமென தாம் இப்பிரேரணையினை முன் வைப்பதாகத் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து கருத்துரைத்த கௌரவ தவிசாளர் அவர்கள் இது முக்கியமானதொன்றாகும். இதற்கமைவாக எமது சபைக்குட்பட்ட தனியார் நிறுவன நிர்வாகிகளுடனும் பாடசாலை சென்று அவர்களுக்கான விழிப்புணர்வுகளையும் அத்துடன் இவ்விழிப்புணர்வுகளை ஏனைய இடங்களுக்கு கொண்டு செல்லும் நோக்கில் குறித்த தொலைபேசி இலக்கங்களை பொது இடங்களில் பாதுகாப்பு இலக்கங்கள் கொண்ட பதாதைகளாக அமைப்பது சாலச்சிறந்தது என நினைப்பதாகவும் அதனை பாடசாலைகள் மூலமாகவும் கல்வித்திணைக்களங்கள் மூலமாகவும் விழிப்புணர்வு செய்வது சிறந்தது எனத் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் பாதாகை அமைப்பது சிறந்தது எனத் தெரிவித்தார். கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்களும் அதனை முன்மொழிந்தார்.

கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் கருத்துரைக்கையில் பெண் உறுப்பினர்களாகி தாங்கள் தான் கவனத்தை செலுத்தியிருக்க வேண்டும் எனவும் இருந்தாலும் கௌரவ உறுப்பினர் கொண்டு வந்த பிரேரணை வரவேற்கத்தக்கது. நாம் மகளிர் சிறுவர் குழு ஒன்று அமைத்திருக்கின்றோம். அக்குழு மூலம் ஓரிரு விடயத்தை மேற்கொண்டிருந்தாலும் தமது தனிப்பட்ட கருத்தாக சிறுவர் கழகம் உரும்பிராய் பிரதேசத்திலுள்ளது. அதனைப் போல 43 சனசமூக நிலையங்கள் எமக்கு கீழ் உள்ளது. அவற்றில் சிறுவர் கழகங்களை அமைப்பதன் மூலமாக அவர்களை அழைத்து தெளிவூட்டல்களை வழங்கலாம். அதற்கு எமது மகளிர் சிறுவர் குழுவும் இணைந்த செயற்படும் எனத் தெரிவித்தார். அவர் மேலும் இவ்வாறு சனசமூக நிலையங்கள ஊடாக பதிவுகளை மேற்கொண்டு குறித்த சிறுவர் கழகத்தை அமைப்பதால் அது வலுவுடையதாக இருப்பதுடன் அவர்களின் விளையாட்டுத்திறன்கள் போன்றவற்றை விருத்தி செய்வதன் மூலம் தற்போதைய துஸ்பிரயோகங்களை தவிர்கலாம் எனத் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்ட கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

**தீர்மானம் 21.06.2022/06**

கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்களது பிரேரணைக்கு அமைவாக நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட சனசமூகநிலையங்களில் சனசமூகநிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் ஆராய்ந்து சிறுவர் கழகத்தை உருவாக்குவதுடன் பாடசாலைகள், தனியார் கல்வி நிறவனங்கள், பொது இடங்களில் பாதுகாப்பு இலக்கங்கள் கொண்ட பதாதைகளாக அமைத்து மக்களுக்கு விழிப்புணர்வினை மெற்கொள்வதென கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றக்கொள்ளப்பட்டது.

கௌரவ உறுப்பினர் திரு.தெ..கிரிதரன் அவர்களது பிரேரணையில் அடுத்து நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட J/112 கிராமப்பிரிவில் பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவுவதால் இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதாகவும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு கௌரவ ஆளுநருக்கு ஆவன செய்து தருமாறு கோருதல் எனும் பிரேரணையினை சபையில் எடுத்துக் கொள்வதற்கு கௌரவ தவிசாளர் அவர்களினால் சபையிடம் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 21.06.2022/07**

கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்களது நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட J/112 கிராமப்பிரிவில் பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவுவதால் இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதாகவும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு கௌரவ ஆளுநருக்கு ஆவன செய்து தருமாறு கோருதல் எனும் பிரேரணையினை சபையில் எடுத்துக் கொள்வதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

அதனைத்தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் தமது பிரேரணை தொடர்பாக கருத்துரைக்கையில் பாதுகாப்பற்ற சூழ்நிலை தொடர்பாக J/112 கிராமப்பிரிவில் இச்சம்பவங்கள் இடம்பெறுகின்றன. 4வது வாள்வெட்டுச் சம்பவம் கட்டப்பிராய் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு CCTV கானொளி, மற்றும் ஆவணங்கள், விளக்கங்களை வழங்கியிருந்தோம். ஆனால் 4 விடயங்களும் சிடப்பில் தான் இருப்பதாகவும் அவர்கள் எதுவித நடவடிக்கையோ முயற்சியோ எடுக்கவில்லை. ஆகவே இவை தொடர்பாக நேரடியாக பொலிஸ்மா

அதிபருக்கும் யாழ் மாவட்ட பொலிஸ்மா அதிபருக்கும், கௌரவ ஆளுநர் மற்றும் அரசாங்க அதிபருக்கும் நல்லூர் பிரதேசசபை ஊடாக கடிதம் வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்ட கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 21.06.2022/08**

கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்களது பிரேரணைக்கு அமைவாக J/112 கிராமப்பிரிவில் பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவுவதால் இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதாகவும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு ஆவன செய்து தருமாறு பொலிஸ்மா அதிபர், யாழ் மாவட்ட பொலிஸ்மா அதிபர், கௌரவ ஆளுநர் மற்றும் அரசாங்க அதிபர் ஆகியோருக்கு நல்லூர் பிரதேசசபை ஊடாக கடிதம் வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் முன்மொழிய கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

கௌரவ உறுப்பினர் திரு.தெ..கிரிதரன் அவர்களது பிரேரணையில் அடுத்து புதிய செங்குந்தா வீதி நீண்ட காலமாக வாகனப் போக்குவரத்திற்கு இடையூறாக காணப்படும் மதகினை விஸ்தீரணம் செய்து வாகனங்கள் செல்வதற்கு ஒழுங்கு செய்து தருமாறு கோருதல் எனும் பிரேரணையினை சபையில் எடுத்துக் கொள்வதற்கு கௌரவ தவிசாளர் அவர்களினால் சபையிடம் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 21.06.2022/09**

கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்களது புதிய செங்குந்தா வீதி நீண்ட காலமாக வாகனப் போக்குவரத்திற்கு இடையூறாக காணப்படும் மதகினை விஸ்தீரணம் செய்து வாகனங்கள் செல்வதற்கு ஒழுங்கு செய்து தருமாறு கோருதல் எனும் பிரேரணையினை சபையில் எடுத்துக் கொள்வதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வி.வி.சிந்துஜா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

அதனைத்தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்களினால் புதிய செங்குந்தா வீதி நீண்ட காலமாக வாகனப் போக்குவரத்திற்கு இடையூறாக காணப்படும் மதகினை விஸ்தீரணம் செய்து வாகனங்கள் செல்வதற்கு ஒழுங்கு செய்து தருமாறு கோரிய போது கௌரவ தவிசாளர் குறித்த பகுதியை தாமும் பார்வையிட்டுள்ளதாகவும் அதனை சபை நிதியில் செய்வதற்கு சபையின் அனமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 21.06.2022/10**

கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்களது பிரேரணைக்கு அமைவாக புதிய செங்குந்தா வீதியில் நீண்ட காலமாக வாகனப் போக்குவரத்திற்கு இடையூறாக காணப்படும் மதகினை சபை நிதி மூலம் விஸ்தீரணம் செய்து வாகனங்கள் செல்வதற்கு ஒழுங்கு செய்து வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

நிகழ்ச்சி நிரலில் அடுத்து உபகுழுக்களில் சிபார்சில் நிதிக்குழு சிபார்சுக்கமைவாக 1ஆம் கட்ட வேலை ஒப்பந்த விபரங்கள் சபைக்கு காட்சிப்படுத்தப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 21.06.2022/11**

2022ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட வேலைகளில் 1ஆம் கட்ட கீழ்வரும் வேலைகளை தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு மற்றும் பெறுகைக்குழு ஆகியவற்றின் சிபார்சுக்கமைவாக மேற்கொள்வதற்கான அங்கீகாரத்தினை சபை வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

| **Council Fund 2022 Stage - I** | | | | |
|---|---|---|---|---|
| **Name** | **Contractor** | **Contract Amount** | **Deviation%** | |
| Renovation of Ward base Roads ( Ward - 01) | Bran Builders, A9 Road, Navatkuli | 1,279,382.00 | 24% | |

| | | | | |
|---|---|---|---|---|
| Renovation of Ward base Roads ( Ward - 03) | Nation Builders, No 42 Kerniyadi Lane, Kokkuvil West, Kokkuvil. | 1,035,000.00 | 36% | |
| Renovation of Ward base Roads ( Ward - 05) | Nation Builders, No 42 Kerniyadi Lane, Kokkuvil West, Kokkuvil. | 240,000.00 | 18% | |
| Renovation of Ward base Roads ( Ward - 06) | Bran Builders, A9 Road, Navatkuli | 1,923,629.70 | 25% | |
| Renovation of Ward base Roads ( Ward - 07) | Nation Builders, No 42 Kerniyadi Lane, Kokkuvil West, Kokkuvil. | 1,103,395.00 | 18% | |
| Renovation of Ward base Roads ( Ward - 08) - 1 | Bran Builders, A9 Road, Navatkuli | 1,431,383.80 | 27.65% | |
| Renovation of Ward base Roads ( Ward - 08) - 2 | Nation Construction, No 42, Keriyadi Lane, Kokkuvil West, Kokkuvil | 3,823,823.20 | 25.00% | |
| Renovation of Ward base Roads ( Ward - 09) | Nation Builders, No 42 Kerniyadi Lane, Kokkuvil West, Kokkuvil. | 1,316,717.00 | 54.00% | |
| Renovation of Ward base Roads ( Ward -11) | Annish Construction, 1178/10 3rd mile post, Pointpedro Road, Kalviyankadu | 3,686,565.00 | 28.00% | |
| Renovation of Ward base Roads ( Ward -12)1 | AVP Construction, Vaddu East, Vaddukkoddai | 5,146,000.00 | 27.00% | |
| Renovation of Ward base Roads ( Ward -12)2 | Mahaan Enterprises, 27/22 Pappathodda Veethy, Inuvil West, Chunnakam | 6,000,000.00 | 30.00% | |

| Name | Contractor | Contract Amount | Deviation % | Add new Rate Deviation% |
|---|---|---|---|---|
| Renovation of Ward base Roads ( Ward - 10) | Sooriya Construction, Sithankerny | 2,710,720.00 | 71.37% | 9.32% |
| Renovation of Concrete Road | Shakthy Engineering, Thumpalai Road, Point Pedro | 6,809,125.00 | 77.24% | 14% |

நிகழ்ச்சி நிரலில் அடுத்து பயிற்சி மண்டபம் மற்றும் கலாச்சார மண்டபம் ஆகியவற்றின் வாடகை தொடர்பானது. குறித்த விடயம் தொடர்பாக பயிற்சி மண்டபம் மற்றும் கலாச்சார மண்டபம் ஆகியவற்றின் வாடகையினை ரூபா 7000.00 ஆக அதிகரிப்பதற்கு சபையிடம் அனுமதி கோரியதைத் தொடர்ந்து சபையில் அராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 21.06.2022/12**

சபையின் பயிற்சி மண்டபம் மற்றும் கலாச்சார மண்டபம் ஆகியவற்றின் வாடகையினை கீழ்வருமாறு அதிகரித்து அறவிடுவதென கௌரவ கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

- பயிற்சி மண்டபம் - ரூபா 7000.00
- கலாச்சார மண்டபம் - ரூபா 7000.00

நிகழ்ச்சி நிரலில் அடுத்து 2022ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட வேலைகளை வழங்குவது தொடர்பில் வீதி புனரமைப்பிற்கு 55 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 1ஆம் கட்ட வேலைகளுக்கு 34.25 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. நாட்டில் ஏற்பட்ட விலையேற்றம் காரணமாக குறித்த 1ஆம் கட்ட வேலைகளுக்கு மேலதிகமாக ரூபா 5.54 மில்லியன் பற்றாக்குறையாகவுள்ளது. அத்தொகையினை 2ஆம் கட்ட வேலைகளுக்கு ஒதுக்கிய நிதியில் இருந்து ஈடுசெய்வதற்கும் அடுத்து வரும் சபை அமர்வில் 2ஆம் கட்ட வேலைக்கான பற்றாக்குறையினை வகைமாற்றம் செய்வதற்கும் சபையிடம் அனுமதி கோரியதைத் தொடர்ந்து சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 21.06.2022/13**

2022ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட வீதி புனரமைப்பில் 1ஆம் கட்ட வேலைகளுக்கு 34.25 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. நாட்டில் ஏற்பட்ட விலையேற்றம் காரணமாக குறித்த 1ஆம் கட்ட வேலைகளுக்கு மேலதிகமாக ரூபா 5.54 மில்லியன் பற்றாக்குறையாகவுள்ளதால் அத்தொகையினை 2ஆம் கட்ட வேலைகளுக்கு ஒதுக்கிய நிதியில் இருந்து ஈடுசெய்வதெனவும் அடுத்து வரும் சபை அமர்வில் 2ஆம் கட்ட வேலைக்கான பற்றாக்குறையினை வகைமாற்றம் செய்வதெனவும் கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

அடுத்து LDSP செயல்திறன் திட்டத்தில் புனரமைக்கப்படும் அரியாலை காரைமனங்கு மயானத்தின் எரிகொட்டகை கொங்கிரீட் 3 மில்லியன் ஒதுக்கபடப்டிருந்தது. தற்போதைய விலையேற்றம் காரணமாக மேலதிகமாக 2மில்லியன் தேவைப்படுகின்றது. அத்தொகையினை வீதிப்பராமரிப்பிலிருந்து மற்றும் காணிக்கொள்வனவிற்கு ஒதுக்கிய நிதியிலிருந்தும் வகைமாற்றம் செய்வதற்கு சபை அனுமதி கோரியதைத்தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 21.06.2022/14**

LDSP செயல்திறன் திட்டத்தில் புனரமைகப்படுகின்ற அரியாலை காரைமுனங்கு மயானத்தின் எரிகொட்டகை கொங்கிரீட் 3 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் தற்போதைய விலையேற்றம் காரணமாக மேலதிகமாக 2மில்லியன் பற்றாக்குறை ஏற்படுவதால் அத்தொகையினை வீதிப்பராமரிப்பிலிருந்து ஒரு மில்லியனையும் காணிக்கொள்வனவிற்கு ஒதுக்கிய ஒரு மில்லியனையும் வகைமாற்றம் செய்து குறித்த வேலையினை மேற்கொள்வதென கௌரவ கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

நிகழ்ச்சி நிரலில் 6வது விடயம் மே மாதம் அனுமதிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான அறிக்கையினை சபை அங்கீகரித்தல். குறித்த அறிக்கை சபையில் காட்சிப்படுத்தப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 21.06.2022/15**

மே மாதம் அனுமதிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான கீழ்வரும் அறிக்கையினை சபை அங்கீகரிப்பதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

| **அனுமதியளிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான அறிக்கை - வைகாசி - 2022** | | | | | |
|---|---|---|---|---|---|
| **நல்லூர் உப அலுவலகம்** | | | | | |
| **இல** | **விண்ணப்ப இல** | **பெயர்** | **முகவரி** | **கட்டட விபரம்** | **அனு. திகதி** |
| 1 | N/111/2021 | ப.மரீனாஜொய்சி | உதயபுரம் கடற்கரைவீதி | வீடு | 13.05.2022 |
| 2 | N/23/2022 | கு.எலிசபேத் | மணிப்புரி 11ம் ஒழுங்கை | அரசமலசலகூடம் | 13.05.2022 |
| 3 | N/117/2021 | போ.பிரியதர்சினி | உதயபுரம் கடற்கரைவீதி | அரசவீட்டுத்திட்டம் | 13.05.2022 |
| 4 | N/15/2022 | பா.அபர்ணா | பலாலி வீதி | 2 மாடி வீடு | 20.05.2022 |
| 5 | N/75/2021 | ந.மேரிகுமுதினி | முள்ளி வீதி | 2 மாடி வீடு & கடை | 27.05.2022 |

| **அனுமதியளிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான அறிக்கை - வைகாசி - 2022** | | | | | |
|---|---|---|---|---|---|
| **கொக்குவில் உப அலுவலகம்** | | | | | |
| **இல** | **விண்ணப்ப இல** | **பெயர்** | **முகவரி** | **கட்டட விபரம்** | **அனு. திகதி** |
| 1 | K/38/2022 | நி.நிரஞ்சனா | பலாலி வீதி | மதில் | 20.05.2022 |
| 2 | K/54/2022 | ம.திவ்வியா | நடராசா வீதி 1ம் ஒழுங்கை | வீடு | 20.05.2022 |
| 3 | K/256/2016 | இ.யோகராணி | நாமகள் வித்தியாசாலை வீதி | திருத்திய 2 மாடி வீடு | 20.05.2022 |
| 4 | K/189/2020 | க.லாவண்யா | முத்தட்டுமடம் 2ம் ஒழுங்கை | திருத்திய 2 மாடி வீடு | 20.05.2022 |
| 5 | K/139/2021 | பு.விஜயலட்சுமி | K.K.S வீதி | திருத்திய 2 மாடி வீடு | 27.05.2022 |
| 6 | K/189/2020 | க.லாவண்யா | முத்தட்டுமடம் 2ம் ஒழுங்கை | COCதிருத்திய 2 மாடி வீடு | 27.05.2022 |
| 7 | K/256/2016 | இ.யோகராணி | நாமகள் வித்தியாசாலை வீதி | COCதிருத்திய 2 மாடி வீடு | 27.05.2022 |

நிகழ்ச்சி நிரலில் அடுத்து மே மாதத்திற்கான கொடுப்பனவு அனுமதி கோரல். குறித்த அறிக்கை சபையில் காட்சிப்படுத்தப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 21.06.2022/16**

மே மாதத்திற்கான கீழ்வரும் கொடுப்பனவுகளுக்கு சபை தழுவு அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

| | Date | Cash Book 162-1001-00000-920<br>Details - May 2021 | | Cash | XE |
|---|---|---|---|---|---|
| | 9 | நவரத்தினம் தளபாடம் | பயனாளிகளுக்கு தளபாட கொள்வனவு | 374,000.00 | |
| | | நவரத்தினம் தளபாடம் | அலுவலக தளபாட கொள்வனவு | 227,880.00 | |
| | | இலங்கை ஆயர்வேத கூட்டுதாபனம் | மருந்து கொள்வனவு | 329,810.00 | |
| | | குளொபல் ஒவ்வீஸ் சப்ளையர்ஸ் | காகிதாதி கொள்வனவு | 217,785.00 | |
| | | குளொபல் ஒவ்வீஸ் சப்ளையர்ஸ் | காகிதாதி கொள்வனவு | 228,380.00 | |
| | | | | **1,377,855.00** | **-** |
| | 12 | பொற்பதி சசநி | தொழிலாளர் கொடுப்பனவு | 512,640.00 | |
| | | செயலாளர் நல்லூர் பி ச | சில்லறைக்காசு | 8,990.00 | |
| | | சிறீலங்கா ரெலிகொம் | தொலைபேசி கட்டணம் | 16,775.89 | |
| | | இலங்கை மின்சார சபை | மின் கட்டணம் | 6,141.00 | |
| | | பி என் தம்பு | சட்டவாளர் கொடுப்பனவு | 50,000.00 | |
| | | ரி கஜன் | விடுமுறை நாள் | 3,420.00 | |
| | | பரன் பில்டேஸ் | கொங்கறீட் றோட் | 2,021,029.63 | 106,041.56 |
| | 13 | றீ சிவில் இஞ்சினியரிங் | கட்டையாலடி கொட்டைக்காடு கொக்குவில் மயான அபிவிருத்தி | 930,869.54 | |
| | | | | **3,549,866.06** | **106,041.56** |
| | | | | **1,377,855.00** | **-** |
| | | | | **4,927,721.06** | **106,041.56** |
| | 17 | செல்வா எலக்ரிக்கல்ஸ் | வயர் கொள்வனவு | 6,850.00 | |
| | | செல்வா எலக்ரிக்கல்ஸ் | வீதி விளக்கு | 1,849,900.00 | |
| | | மெற்றோ பொலிடன் | போட்டோ கொப்பி மெசின் கொள்வனவு | 319,500.00 | |
| | | மாபில் சிவில் இஞ்சினியரிங் | கொக்குவில் சந்தை கடை தொகுதி | 220,749.43 | |
| | | க.ஜெகதீசன் | விடுமுறை நாள் | 12,670.65 | |
| | | யாழ் மாவட்ட கூட்டுறவு அச்சகம் | ஆவணங்கள் பதிவேடுகள் அச்சிட்டமை | 7,950.00 | |
| | | ஏசியன் மீடியா | விளம்பரம் | 2,700.00 | |
| | | ஏசியன் மீடியா | விளம்பரம் | 14,400.00 | |
| | | வலம்புரி | விளம்பரம் | 22,500.00 | |
| | | மொபிடல் | ஜீபிஎஸ் பில் | 1,945.90 | |
| | | | | **2,459,165.98** | **-** |
| | | | | **4,927,721.06** | **106,041.56** |
| | | | | **7,386,887.04** | **106,041.56** |
| | 23 | எஸ் சுதாகரன் | வாகன வரி | 11,684.03 | |
| | | சந்திரா பாதுகாப்பு சேவை | பாதுகாப்புக் கொடுப்பனவு | 184,635.00 | |
| | | கஸ்ரல் சேவிஸ் | சுத்திகரிப்பு சேவை | 243,445.00 | |
| | | ஹைஐ வெக் இலவேட்டர் | பிடிபணம் | 75,000.00 | |
| | | ரி கஜன் | விடுமுறை நாள் | 3,194.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | கே சேனாதிராசா | மயானக் கொடுப்பனவு | 2,600.00 | |
| | | கே சேனாதிராசா | மயானக் கொடுப்பனவு | 3,400.00 | |
| | | வி இளங்கோ | மேலதிக நேரம் | 2,366.25 | |
| | | கிறியேட்டிவ் கென்ஸ்ரக்சன் | காரைக்கால் சித்துபதி திருநெல்வேலி மயான அபிவிருத்தி | 882,501.54 | |
| | | அம்முச்சி | தாய் சேய் பராமரிப்பு நிலையத்திற்கான பொருட்கள் | 51,933.50 | |
| | | சிற்றி எலக்ரோனிக்ஸ் | ரிவி கொள்வனவு | 97,500.00 | |
| | | நளின் இன்போமேசன் | கொம்பியூட்டர் | 461,000.00 | |
| | | | | **2,019,259.32** | **-** |
| | | | | **7,386,887.04** | **106,041.56** |
| | | | | **9,406,146.36** | **106,041.56** |
| | | நளின் இன்போமேசன் | கணனி சேவிஸ் | 2,500.00 | |
| | | நளின் இன்போமேசன் | கைவிரல் அடையாள இயந்திர திருத்தம் | 11,250.00 | |
| | | | | **13,750.00** | **-** |
| | | | | **9,406,146.36** | **106,041.56** |
| | | | | **9,419,896.36** | **106,041.56** |
| | 27 | முகாமையாளர், இலங்கை வங்கி | சபை உறுப்பினர் கொடுப்பனவு | 315,000.00 | |
| | | | | **315,000.00** | **-** |
| | | | | **9,419,896.36** | **106,041.56** |
| | | | | **9,734,896.36** | **106,041.56** |
| | 30 | செயலாளர் பிச நல்லூர் | எல்டிஎஸ்பி கணக்கிற்கு மாற்றம் | 8,225,311.37 | |
| | | செயலாளர் பிச நல்லூர் | வருமானமாக மாற்றம் | | 93,600.00 |
| | | | | **8,225,311.37** | **93,600.00** |
| | | | | **9,734,896.36** | **106,041.56** |
| | | | | **17,960,207.73** | **199,641.56** |
| | 31 | பொது முகாமையாளர் பநோ கூ ச | எரிபொருள் | 365,259.50 | |
| | | ரி கஜன் | பயணக் கொடுப்பனவு | 1,380.00 | |
| | | அவன்ஸ்மாட் | மாற்றப்படாத காசோலை வைப்பிலிருந்து வருமானமாக மாற்றம் | 183,624.62 | |
| | | எஸ் சோபிதன் | சட்டவாளர் கொடுப்பனவு | 97,500.00 | |
| | | கோல்டன் ஈகிள் | சாரதி கொடுப்பனவு | 76,440.00 | |
| | | கஸ்ரல் சேவிஸ் | சுத்திகரிப்பு சேவை | 161,995.00 | |
| | 31 | சூரியா ஹாட்வெயார் | பூட்டுக்கள் கொள்வனவு | 3,000.00 | |
| | | செல்வா எலக்ரிக்கல்ஸ் | அழைப்புமணி கொள்வனவு | 1,250.00 | |
| | | எஸ் சுதர்ஜன் | பயணக் கொடுப்பனவு | 1,400.00 | |
| | | வி இளங்கோ | மேலதிக நேரம் | 2,366.10 | |
| | | வலம்புரி | விளம்பரம் | 12,188.00 | |
| | | ஜே டி எம் இக்சான் | கேள்வி வைப்பு | 5,000.00 | |
| | | கே கிருபாகரன் | புத்தகம் | 400.00 | |
| | | றஜிதா அரிச்சந்திரன் | புத்தகம் | 810.00 | |
| | | சிறீ நாராயணா சசநி மற்றும் ஏனையவை | வருடாந்த மானியம் | 70,000.00 | |
| | | இலங்கை மின்சார சபை | மின் கட்டணம் | 294.90 | |
| | | இலங்கை மின்சார சபை | மின் கட்டணம் | 770.70 | |
| | | சிறீலங்கா ரெலிகொம் | தொலைபேசி கட்டணம் | 1,534.15 | |
| | | எஸ் சிவானுஜன் | விடுமுறை நாள் | 11,419.50 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ஆர் ஜோதி | இடர் கடன் | 206,250.00 | 43,750.00 |
| | | ஆணையாளர் மாநகரசபை | இடர் கடன் | 376,320.00 | |
| | | கே ஜெயபிரசாந் | வாகன வாடகை | 125,000.00 | |
| | | இ ஜெயகரன் மற்றும் ஏனையவர்கள் | கட்டட அனுமதி குழு கொடுப்பனவு | 8,500.00 | |
| | | முகாமையாளர், மக்கள் வங்கி | எல்ஜிஜஜபி கடன் | 332,004.30 | |
| | | | | **2,044,706.77** | **43,750.00** |
| | | | | **17,960,207.73** | **199,641.56** |
| | | | | **20,004,914.50** | **243,391.56** |

**Cash Book 1095945 - May 2022**

| Date | Details | Cash | XE |
|---|---|---|---|
| 24 | முகாமையாளர், இலங்கை வங்கி திருநெல்வேலி | 5,194,512.57 | |
| | செயலாளர் மற்றும் கணக்காளர். ஓய்வூதிய திணைக்களம் | 241,480.13 | |
| | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 29,000.00 | |
| | செலிங்கோ இன்சுரன்ஸ் | 3,738.00 | |
| | ஆளுநரின் செயலாளர் வடமாகாணம் | 1,250.00 | |
| | ஆணையாளர் மாநகரசபை | 15,566.82 | |
| | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 5,606.00 | |
| | செயலாளர் பிரதேச சபை நல்லூர் | 533,939.83 | 19,356.73 |
| | | **6,025,093.35** | **19,356.73** |
| 26 | முகாமையாளர், இலங்கை வங்கி திருநெல்வேலி | 670,784.00 | |
| | செயலாளர் மற்றும் கணக்காளர். ஓய்வூதிய திணைக்களம் | 28,341.00 | |
| | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 2,350.00 | |
| | செயலாளர் பிரதேச சபை நல்லூர் | | 375.00 |
| | | **701,475.00** | **375.00** |
| | | **6,025,093.35** | **19,356.73** |
| | | **6,726,568.35** | **19,731.73** |

**தீர்மானம் 21.06.2022/17**

கொக்குவில் தபாலகத்தின் முன்பகுதி செப்பணிட்டமைக்கான கொடுப்பனவு ரூபா 936,292.00 வினை குரு இங்சினியருக்கு வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

**தீர்மானம் 21.06.2022/18**

மருத்தவபீடத்திற்கு முன் நடைபாதை அமைப்பதற்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 2,495,146.00 வை சோலா இஞ்சினியறிங்கிற்கு வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

**தீர்மானம் 21.06.2022/19**

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு முன் நடைபாதை அமைப்பதற்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 1,197,865.31 வை சோலா இஞ்சினியறிங்கிற்கு வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

**தீர்மானம் 21.06.2022/20**

வட்டார ரீதியான வீதி புனரமைத்தல் வட்டாரம் 12 இற்கான வேலைக்கு 150 நாள் காலநீடிப்பு அனுமதியுடன் J.S Contractors என்பவருக்கு இறுதிக்கொடுப்பனவு ரூபா 2,303,612.27 வழங்குவதற்கும் பொருந்திய நட்டமாக ரூபா 192,254.50 அறவிடவும் சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

**தீர்மானம் 21.06.2022/21**

LDSP வேலைத்திட்டத்தின் கீழ் கொக்குவில் சந்தை கடைத்தொகுதி அமைத்தல் கட்டம் 2 வேலைக்கான 6வது பகுதிக்கொடுப்பனவு ரூபா 3,199,174.13 ஐ மாபிள் சிவில் இஞ்சினியறிங்கிற்கு வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

நிகழ்ச்சி நிரலில் அடுத்து வருமான செலவு அறிக்கை சமர்ப்பித்தல். குறித்த அறிக்கை சபையில் காட்சிப்படுத்தப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 21.06.2022/22**

மே மாத வருமான செலவு அறிக்கையினை சபை அங்கீகரிப்பதாக கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வி.வி.சிந்துஜா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

நிகழ்ச்சி நிரலில் அடுத்து ஏனையவையில் யூலை மாதம் இடர் கடன் வழங்கப்படும் உத்தியோகத்தர்கள் விபரம் காட்சிப்படுத்தப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 21.06.2022/23**

யூலை மாதம் கீழ்வரும் உத்தியோகத்தர்களுக்கு இடர்கடன் வழங்க சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- **இடர்கடன் வழங்கல் (யூலை)**
  - திருமதி.தி.ஆஷா – 250,000.00
  - திருமதி.நி.ஜீபிகா – 250,000.00
  - ஐ.சோபிகா – 250,000.00
  - திரு.க.சேனாதிராசா – 250,000.00

ஏனைய விடயத்தில் அடுத்து திருநெல்வேலி சந்திப்பகுதியில் உள்ள டயலொக் கோபுரம் தொடர்பானது. குறித்த டயலொக் கோபுரம் கடந்த 15 வருடங்களாக இயங்கி வருகின்றது. அதற்கு நீண்ட காலமாக கௌரவ நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு உரிய ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் அவர்களிடம் பழைய ஆவணங்களும் பெற முடியாத காரணத்தினால் அதனை அகற்றும் நிலையில் இருந்தது. அதனை அகற்றும் சந்தர்ப்பத்தில் எமது பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இக்கிராம மக்களின் டயலொக் சேவை பாதிப்படையும் என்ற காரணம் காட்டி அவர்களுக்கு தற்காலிக அனுமதியினை பிரதேசசபையால் குறித்த கோபுரத்தினை அகற்றும் சந்தர்ப்பத்தில் எவ்வித மாற்றுக்கருத்துமின்றி அகற்ற வேண்டும் என்ற ஒரு ஒப்பந்தத்தின் மூலமாக தொடர்ந்தும் இயங்குவதற்கு சபையின் அனுமதியினைக் கோரிய போது குறித்த விடயம் சபையில் விரிவாக ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 21.06.2022/24**

திருநெல்வேலி சந்திப்பகுதியில் உள்ள டயலொக் கோபுரங்களுக்கு ஒரு வருட காலத்திற்குள் உரிய அனுமதியினை பெற வேண்டும் என்ற நிபந்தனையுடன் பொது மக்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் நன்மை கருதி ஒருவருட காலம் தற்காலிகமாக அனுமதி வழங்குவதென கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து அரியாலை சித்துப்பாத்தி இந்துமயான சபையின் பொதுக்கூட்டம் தமது தலைமையில் இடம் பெற்றது. அதில் கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா மற்றும் திருமதி.அ.அகிலாண்டரூபி ஆகியோர் உள்வாங்கப்பட்டு நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இனிவரும் காலங்களில் அந்த வட்டார சபை உறுப்பினர்கள் குறித்த மயான சபை நிர்வாகத்தில் கட்டாயம் அங்கம் வகிக்க வேண்டும் என புதிய யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த அறிக்கைக்கான அனுமதியினை சபையிடம் கோரிய போது குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 21.06.2022/25**
அரியாலை சித்துப்பாத்தி இந்துமயான சபையின் பொதுக்கூட்ட அறிக்கையினை சபை ஏற்று அங்கீகரிப்பதாக கௌரவ உறுப்பினர் திருதெ.கிரிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்களினால் கொக்குவில், கோண்டாவில் இந்து மயானங்களில் இரவு நேரத்தில் உடல்களை எரியூட்ட செல்வதனால் அம்மயானங்களுக்கு போதிய மின்விளக்கு இல்லாமையால் மக்கள் சிரமப்படுவதால் குறித்த மின்விளக்கு பொருத்தி தருமாறு கோரினார்.

ஏனைய விடயத்தில் கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் அவர்கள் கட்டையாலடி இந்த மயானத்தில் எரியூட்டும் தண்டவாளம் ஒரு பக்கம் இல்லாதமை மக்கள் எரியூட்டம் போது சிரமப்படுவதாகவும் அத்துடன் மயானங்களை மாதாந்தம் சிரமதானம் மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஏனைய விடயத்தில் அடுத்து கௌரவ உறுப்பினர் திரு.வ.சிறில்றூமன் விஜேந்திரன் சுகயீனம் காரணமான இன்றைய கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியவில்லை என தொலைபேசி மூலமாக அறியத்தந்துள்ளார் அவரது விடுமுறைக்கான அனுமதியினை கௌரவ தவிசாளர் சபையிடம் கொரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 21.06.2022/26**
எமது கௌரவ உறுப்பினர் திரு.வஸ்ரியாம்பிள்ளை சிறில்றூமன் விஜேந்திரன் அவர்கள் சுகயீனம் காரணமாக இன்றைய (21.06.2022) கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியவில்லை என தொலைபேசி மூலமாக அறியத் தந்துள்ளமையினை கௌரவ சபை ஏற்று அவர்களது விடுமுறைக்கான அனுமதியினை வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் கௌரவ தவிசாளர் அவர்களினால் வட்டார ரீதியாக வீட்டுத்தோட்டத்தினை ஊக்குவிக்கும் முகமாக 1ஆம் கட்டமாக நாற்றுக்கள் வரும் வியாழக்கிழமை வழங்குகின்றோம். சபையின் வாழ்வாதாரஉதவிக்கு 6.6 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 5லட்சம் ரூபாவினை வகைமாற்றம் செய்து 2ஆம் கட்டமாக வீட்டுத்தோட்டத்தை ஊக்குவிக்கும் முகமாக 120 பயணாளிகளுக்கு பயிர் நாற்றுக்கள் மற்றும் விதைகள் வழங்குவதாகவும் எமது இயற்கை உரத்தினை அவர்களுக்கு இலவசமாக வழங்குவதாகவும் 3ஆம் கட்டமாக பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு ஒரு செயற்றிட்டம் மூலம் வழங்குவதால் வீட்டுத்தோட்டமானது மேலும் ஊக்குவிக்கப்படும் எனத் தெரிவித்து குறித்த வகைமாற்றம் செய்வதற்கு சபை அனுமதியினைக் கோரினார். அதனைத் தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 21.06.2022/27**
மக்கள் மத்தியில் வீட்டுத்தோட்டத்தை ஊக்குவிக்கும் முகமாக வறுமையொழிப்பும் வாழ்வாதார மேம்பாடும் 607(9) எனும் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள 6.6 மில்லியன் நிதியிலிருந்து ரூபா 5 லட்சம் நிதியினை பயன்படுத்தி சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வட்டாரத்திற்கு தலா 10 எனும் அடிப்படையில் பிரதேச செயலரால் சிபார்சு செய்யப்படும் வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபடும் மற்றும் ஈடுபட ஆர்வமுடைய 120 பயனாளிகளுக்கு வீட்டுத்தோட்டத்திற்கான உதவிப்பொருட்கள் (நாற்றுக்கள் மற்றும் சேதனப்பசளை) வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ உறுப்பினர் செல்வி.கு.பிரிந்தா அவர்கள் பி.ப.12.05 மணியளவில் சபைக்கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

ஏனைய விடயத்தில் அடுத்து ஏற்கனவே நடைமுறையிலுள்ள Golden சாரதி சேவையின் ஒப்பந்தகாலம் 2022.07.04ஆம் திகதியுடன் நிறைவடைவதால் புதிய சாரதி ஒப்பந்தம் மேற்கொள்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ள காரணமாக கோட்டின் ஈகிள் சாரதி சேவையின் ஒப்பந்தகாலத்தினை ஒருமாதம் நீடிப்பதற்கு சபையிடம் அனுமதி கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 21.06.2022/28**
புதிய சாரதி ஒப்பந்தம் மேற்கொள்வதில் கால தாமதம் ஏற்படுவதால் ஏற்கனவே நடைமுறையிலிருந்து 04.07.2022 வரை முடிவடையும் Golden Eagle சாரதி சேவையின் ஒப்பந்த காலத்தினை 2022.07.31ஆம் திகதி வரை ஒருமாத காலம் நீடிப்பதென கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்கள் காரைக்கால் பசளை தயாரிக்கும் நிலையத்தில் கழிவகற்றல் பிரச்சனை தவிசாளர் பதவியேற்ற காலத்தில் முக்கால் வாசி தீர்க்கப்பட்டது. தற்போது மதிலுக்கு மேலாக மீண்டும் கழிவுகள் மூட்டைகளாக அடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது எனவும் குறித்த நிலைய வாயிலில் மின்விளக்கு இல்லாது இருளாக காணப்படுவதாகவும் அங்கு கழிவகற்றல் நிலையம் இருப்பதை அறிந்து இரவு நேரத்தில் வேறு பிரதேசத்தில் இருப்பவர்கள் கழிவுகளை கொண்டுவந்து எறிந்துவிட்டுச் செல்வதாகவும் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் மயானத்திலுள்ள இரு மின்விளக்குகளும் ஒளிரவில்லை எனவும் தெரிவித்தார்.

அதன்போது கௌரவ தவிசாளர் அவர்களினால் வலி.தென்மேற்கு பிரதேசசபையும் மேலதிகமாகவுள்ள திண்மக்கழிவுகளை கோருகின்றனர். குறித்த கழிவுகளை தரம்பிரித்து வழங்க இரு தொழிலாளர்கள் தேவையாகவுள்ளது. அத்துடன் தற்போது இயற்கை உரம் இலவசமாக வழங்குவதாக கூறியிருக்கின்றோம். தரம் பிரிக்கப்பட்ட பொலித்தீன்கள் தான் அவ்வாறு காணப்படுவதாகவும் அதனை மிக விரைவில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தற்போதைய போக்குவரத்து சிரமம் காரணமாக பொலித்தீன் மற்றும் போத்தல்கள் எடுப்பவர்கள் வரவின்மையும் காணப்படுவதாகவும் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் ஒவ்வொரு மயானசபையும் இதில் அக்கறை கொண்டு செயற்பட வேண்டும். தற்போது எம்மிடம் கையிருப்பில் மின்விளக்குகள் எவையும் இல்லை. காரணம் கேள்வி கோரியவர் குறித்த விலையில் மின்விளக்கு தரமுடியாது என பின்வாங்கியுள்ளனர் எனவும் அத்துடன் மின்விளக்கு திருத்துவதற்கான பொருட்களும் தற்போது இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் செம்மணி இந்துமயானத்தை புனரமைப்பு தொடர்பாக குறிப்பிட்ட போது கௌரவ தவிசாளர் அவர்களினால் குறித்த மயானத்தை நாம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் துப்பரவு பணிகளை குறித்த மயான சபை மூலமாக மேற்கொள்ளலாம் எனவும் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களால் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றிகள் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து சபைக்கூட்டமானது பி.ப. 12.20 மணியளவில் நிறைவடைந்தது.

செயலாளர்,
நல்லூர் பிரதேசசபை